இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 23 ISSUE 04 APRIL-2023

ஆண்டு சந்தா 100/- தனிப்பிரிதி 10/-



# என் மீட்பர் உயிரோடிருக்கிறார்

இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிகை இப்பொழுது Digital முறையில் நம்முடைய இணையதளத்திலும்
WWW.JESUSLIVES.IN

jesuslives.in

# ஆசிரியர் மடல்

ஆண்டவரும் உலக
இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில்
அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் வாயிலாக உங்களைனச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்று யோபு 19:25-ல் சொல்லப்பட்டுள்ள வார்த்தையின்படி நம் தேவன் உயிரோடிருக்கிறார். நமக்கு வருகிற பாடுகள் வேதனைகள், போராட்டங்களில் நம்மை உயிரோடு காப்பாற்றி, நம்மை கரை சேர்க்கிறவராய் நம் தேவன் இருக்கிறார். கடந்த நாட்களில் காங்கேயத்தில் நடைபெற்ற கூட்டத்திலும், அதைத் தொடர்ந்து செம்பட்டி வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெப மையத்தில் நடைபெற்ற உபவாச ஜெபத்திலும் கர்த்தர் மகிமையான காரியங்களைச் செய்தார். அவருடைய நாமத்தை உயர்த்த கர்த்தர் கிருபை செய்தார். அநேகர் இந்த எழுப்புதல் கூட்டத்தின் மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டனர். தொடர்ந்து மதுரையில் நடைபெறும் உபவாச ஜெபங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். கர்த்தர் இந்த மதுரைப் பட்டணத்தில் மகிமையான காரியங்களைச் செய்யவும், கிருபையை ஊற்றவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். இயேசு சந்திக்கிறார் ஊழியத்தின் நிறுவனரும், அன்பு சகோதரர் GPS. ராபின்சன் அவர்களின் துணைவியார் சகோதரி கிறிஸ்டினா தன்னுடைய 55-ஆவது வயதில் மகிமைக்குள் பிரவேசித்திருக்கிறார். பெண்கள் மத்தியில் தன்னுடைய பெலவீனத்திலும் மகிமையான எழுப்புதலைக் கொண்டு வந்த அவர்கள் தன்னுடைய ஓட்டத்தை ஓடிமுடித்து மகிமைக்குள் பிரவேசித்திருக்கிறார்கள். ஆண்டவராகிய தேவன் தாமே சகோதரர் ராபின்சன் அவர்களையும், அவர்கள் இருபிள்ளைகளையும், அவர்கள் குடும்பத்தினரையும், இயேசு சந்திக்கிறார் ஊழியத்தையும் ஆசீர்வதிக்க ஜெபித்துக் கொள்ளுங்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் மாதத்தின் கடைசி நாளில் **நம்பிக்கையின் இரவு** என்ற நிகழ்ச்சி அநேகருக்கு ஆசீர்வாதமாக அமைந்துள்ளது. மாதத்தின் கடைசி நிமிடங்களையும், மாதத்தின் முதல் தேதியில் அதிகாலை 12:30 மணி வரை நடைபெறுகிற இந்த நிகழ்ச்சியை நீங்களும் பாருங்கள், மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். தொடர்ந்து எல்லா நிகழ்ச்சிகளிலும், எல்லா ஊழியங்களிலும் கர்த்தருடைய கரம் கூட இருந்து நடத்தவும், தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். கர்த்தருடைய மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.



இயேசுவின் பணியில்,

(சகோ. L. வின்சென்ட்ராஜ்)

jesuslives.in



# என் மீட்பர் உயிரோடிருக்கிறார்

சகோ. L. வின்சென்ட்ராஜ்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த செய்தியின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். கிறிஸ்தவர்களுடைய பெரிய நம்பிக்கை, விசுவாசம், பொக்கிஷம் ஆண்டவராகிய இயேசு உயிர்த்தெழுந்தது தான். அவர் நித்தியமானவர், தலைமுறை தலைமுறையாக வாழ்கிறவர், ஜீவிக்கிறவர், உயிரோடிருக்கிறவர். அவருக்கு துவக்கமும் இல்லை, முடிவும் இல்லை.

. உபா 32:40 நான் என் கரத்தை வானத்திற்கு நேராக உயர்த்தி, நான் என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவர் என்கிறேன்.

அப்படி ஜீவித்திருக்கிறவர், என்றென்றைக்கும் வாழ்கிறவர் ஏன் மரிக்க வேண்டும்? ஏன் சாக வேண்டும்? தான் படைத்த, சிருஷ்டித்த மனிதன் பாவத்தின் சம்பளமாகிய மரணத்தைப் பெற்றபடியால், பிசாசினால் வஞ்சிக்கப்பட்டு, ஏமாற்றப்பட்டபடியால் அதன் தண்டனையான இறப்பை, மரணத்தை அடைந்தான். ஆதி 2:17-ல் ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம், அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்.



jesuslives.in

தேவன் அவர்களுக்கு கொடுத்த நியமத்தை, கட்டளையை அவர்கள் மீறி நடந்ததினாலே பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை பெற்றுக் கொண்டார்கள். அதிலிருந்து நித்திய வாழ்வை இழந்து, என்றென்றைக்கும் ஜீவிக்கிற வாழ்வை இழந்து, தன் வாழ்க்கைக்கு தானே முடிவு கட்டிக்கொண்டார்கள். அவர்கள் தேவ கட்டளையை மீறினபடியால், நியமத்தை மீறினபடியால் மரணம் அவர்களை ஆண்டு கொண்டது. அவர்கள் சாத்தானைப் போல் தேவனுக்கு விரோதமாக,எதிராக செயல்பட்டபடியால் தேவனுடைய கோபமும், தேவநீதியும் அவர்கள் மேல் வந்தது. ஆகவே தான் ஆண்டவராகிய தேவன் அவர்களைப் பார்த்து சொன்னார் நீ என்னோடு வாழ, நித்திய நித்தியமாய் ஜீவிக்க, என்னோடிருக்க, என் மகத்துவத்தை அணிந்து அனுபவிக்கவும், என்னோடு உலாவவும் உன்னை ஏற்படுத்தினேன். நீயோ, உனக்கு என்று ஒரு வழியை ஏற்படுத்திக் கொண்டாய் என்றார். ஆகவே தான் ஆதி 3:23-ல் நீ எந்த மண்ணிலிருந்து எடுக்கப்பட்டாயோ அதே, மண்ணை பண்படுத்த, பயன்படுத்த பூமிக்கே திரும்பிப் போ. இனி இந்த பூமியிலே நீ அதிக நாள் உயிரோடிருப்பதில்லை. அதற்கு ஒரு எல்லையையும், காலத்தையும் வைக்கிறேன். உன் ஆத்துமா என் தொடர்பை இழந்தபடியால் அது மரித்துப் போய்விட்டது. ஒரு மரித்த ஆத்துமா என் சமூகத்தில் பிழைக்கவோ, வாழவோ முடியாது.



உங்கள் ஆத்துமாவை நான் ஆரோசிக்கிறேன், அருவருக்கிறேன். என் வீடு ஜெபவீடு, நான் தங்கும் வீடு (இருதயம்) என்று எதிர்பார்த்தேன், நீங்களோ அதை கள்ளர் குகையாக்கி விட்டீர்கள். இனி இந்த வாழ்வளிக்கும் தோட்டத்தில், என் சமூகத்தில் இருக்க முடியாது, பூமிக்கே திரும்பிப் போ என்று ஆதி 3:24-ல் அவர் மனுஷனைத் துரத்திவிட்டு ஜீவவிருட்சத்துக்குப் போகும் வழியைக் காவல் செய்ய, ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேருபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார்.
அதன் பிறகு மனிதனுக்கு தேவனுடைய நினைவோ, பரலோக வாசனையோ, தேவனுடைய தொடுதலோ வரவில்லை. அவன் உணர்வற்றவனாக, இருளடைந்தவனாக, தேவனை அறிந்திருந்தும், பார்த்திருந்தும் அவரை ஸ்தோத்தரியாமலும், மகிமைப்படுத்தாமலும் இருந்து உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்துவிட்டது. இதுதான் முதலாம் மரணம். சரீரத்தில் உயிரோடிருந்தார்கள் ஆனால் தங்கள் ஆத்துமாவில் மரித்துப் போய்விட்டார்கள். மரித்தவர்களும், மவுனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள். உயிருள்ள நாமோ, இதுமுதல் என்றென்றைக்கும் கர்த்தரை ஸ்தோத்தரிப்போம் அல்லேலூயா சங் 115:17,18 அப்படிச் சொல்லுகிறது. இப்படிப்பட்ட ஒரு மனிதனுக்காக தன் ஜீவனைக் கொடுக்கவும், உயிரைக் கொடுக்கவும், அவனைத் திரும்பவும் வாழ வைக்கவும், தேவ சமூகத்தில் வந்து சேர்க்கவும், பிழைக்கவும் தேவன் ஒரு திட்டத்தை வைத்தார். அதுதான் மனிதன் மறுபடியும் ஜீவன் பெற வேண்டும், தேவனோடு ஒப்புரவாக வேண்டும். மறுபடியும் அவர் சமூகத்தில் பிழைக்க வேண்டும், வாழ வேண்டும் என்று.

அடுத்து அவனுக்கு ஒரு வழியைக் காட்டுவதற்கு யோவான் 3:16-ல் தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப் போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். உலகை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படும்படியே வந்தார். அதனால் பிதாவின் மடியில் இருந்த அவரின் ஒரேபேறான மகனாகிய இயேசு நான் இந்த பூமிக்கு இறங்கிப் போகிறேன், காணாமல் போனதைத் தேடவும், இரட்சிக்கவும் இந்த பூமிக்கு போகிறேன் என்றார்.


jesuslives.in

யோவான் 10:10-ல் திருடன் திருடவும் கொல்லவும், அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். நானே வழி, நானே சத்தியம், நானே ஜீவன் என்றார். மரணத்திலிருந்தும், பாதாளத்தின் வல்லடிக்கும் தப்புவிக்கிறவர் நானே என்றார். சங் 89:48-ல் மரணத்தைக் காணாமல் உயிரோடிருப்பவன் யார்? தன் ஆத்துமாவைப் பாதாள வல்லடிக்கு விலக்கி விடுகிறவன் யார்? என்று மரித்த அநேகர் கதறிக் கொண்டிருந்தார்கள். நாங்கள் எப்பொழுது ஜீவவிருட்சத்தைப் பார்ப்போம், எங்களை மறுபடியும் இந்த ஏதேன் தோட்டத்திலே தேவனோடு இணைப்பவர் யார்? என்று கதறிக் கொண்டிருந்தார்கள். சங் 49:7,8,9-ல் ஒருவனாவது, தன் சகோதரன் அழிவைக் காணாமல் இனி என்றைக்கும் உயிரோடிருக்கும்படி, எவ்விதத்தினாலாவது அவனை மீட்டுக்கொள்ளவும், அவனிமித்தம் மீட்கும் பொருளை தேவனுக்குக் கொடுக்கவுங் கூடாதே. அவர்கள் ஆத்துமமீட்பு மிகவும் அருமையாயிருக்கிறது. அந்த ஆத்தும மீட்பைக் கொடுக்க, பாதாள வல்லடிக்கு, நரகத்திற்கு தப்ப, நாம் நித்தியஜீவனை பெற்று மறுபடியும் நித்திய பிதாவோடு இணைய இயேசு இந்த பூமிக்கு இறங்கி வந்து, ஒரு பெரிய ஆத்தும மீட்பை உண்டுபண்ணினார். அது தான் அவரது மனித அவதாரம், மனிதனாக பூமிக்கு இறங்கி வந்தார். பிலிப்பியர் 2:6,7-ல் அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். எபிரே 2:14,15-ல் ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க அவரும், அவர்களைப் போல மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவரானார். மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கு ஜீவகாலமெல்லாம் பயத்தினாலே அடிமைத்தனத் திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார். அதனால் தான் இயேசு பூமிக்கு இறங்கி வந்து என் ஆடுகள் ஜீவனைப்பெறவும், அது பரிபூரணப்படவும், தேவனோடு இணைக்கப்படவும் மரணத்தை ருசி பார்த்தேன் என்றார். மாற் 10:45-ல் அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல் ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்று சொல்லப்பட்டுள்ளது. அதனால் தான் அவர் பூமிக்கு வரவும், மரிக்கவும் வேண்டியதாயிருந்தது. இதுதான் ஆத்தும மீட்பு, இதுதான் பாதாள வல்லடிக்கு விலக்கி காப்பது. இதைச் செய்யத்தான் அவர் பரலோகத்திலிருந்து பூமிக்கு இறங்கினார். தேவகுமாரனாய் இருந்தவர் மனுஷகுமாரனாக மறினார். நானோ என் ஆடுகளுக்காக ஜீவனைக் கொடுக்கவும், அது பரிபூரணப்படவும் இறங்கி வந்தேன் என்றார்.

அவர் மனிதனுடைய தண்டனையை ஏற்றுக்கொண்டு மரணத்தை ருசிபார்த்தார். மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? என்றார். இந்த மீட்பின் திட்டத்தை நிறைவேற்றத்தான் அவர் பூமிக்கு வந்தார், ஜீவனைக் கொடுத்தார்.

அவர் மனிதனுடைய தண்டனையை ஏற்றுக்கொண்டு மரணத்தை ருசிபார்த்தார். மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? என்றார். இந்த மீட்பின் திட்டத்தை நிறைவேற்றத்தான் அவர் பூமிக்கு வந்தார், ஜீவனைக் கொடுத்தார்.


காணாமற்போனதைத் தேடவும், மீட்கவும் வந்தேன் என்றார். இன்றைக்கு யாரெல்லாம் இதை விளங்கிக் கொண்டு, அறிந்து கொண்டு தேவனுக்குத் தன் வாழ்வை அர்ப்பணிக்கிறார்களோ அவர்கள் பரலோக குடும்பமாக மாற முடியும். தேவனோடு இணைக்கப்பட, அவரோடு வாழ, நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள வழி உண்டாக்கி வைத்திருக்கிறார். இன்றைக்கு இந்த வழியை, தேவனுடைய உன்னத திட்டத்தை கண்டுபிடித்து அவருடைய வழியில் நடக்கிறவன் பாக்கியவான். போகட்டும் இயேசு மரித்த பின் என்ன நடந்தது? எப்படி அவர் உயிரோடு எழுந்தார் என்பதைப் பார்ப்போம்.



jesuslives.in

# மரித்தேன், ஆனாலும்,இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்

பிள்ளைகள் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவர்களானபடியால் இவரும், மாம்சத்தோடும், இரத்தத்தோடும் இறங்கி வந்து மரணத்தை ருசி பார்த்தார். இந்த உலகத்தில் மனிதனுடைய வாழ்க்கைக்கு முடிவு மரணம் தான். மரணம் கொடிதானது நம்மில் யாரும் மரணத்தை அவ்வளவு எளிதாக விரும்புவதில்லை, அதை கடந்து போகவும், அதை சந்தித்து ஏற்றுக்கொள்ளவும் தான் பயப்படுவோம். ஆனால் இயேசு பூமியில் வாழ்ந்த போது மனுஷகுமாரன் பாடுபடவும், மூப்பராலும், பிரதான ஆசாரியராலும், வேதபாரகராலும் பலபாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்க வேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்கு அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார் மத் 16:21 அப்படிச் சொல்லுகிறது. தான் போவது நல்லது என்று அந்த நாளை எதிர்பார்த்து அதை சந்திக்க ஆவலோடு காத்திருந்தார். தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவோ, தான் மற்றவர்களுடைய கையில் இருந்து தப்புவிக்கப்படவோ அவர் விரும்பவில்லை.



1 கொரி 15:55-ல் மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? என்றார். மரணத்தை வரவேற்று சவால் விட்டார்.

1 பேதுரு 3:18-ல் ஏனெனில், கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக, நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒரு தரம் பாடுபட்டார். அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார். அவர் மாம்சத்தில் கொலை செய்யப்பட்டார்.

அப்படியே அவர் கல்லறையில் இருந்து விடவில்லை, மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார். எப்படி? அவர் தேவனுடைய வல்லமையினால், ஆவியினால் உயிர்ப்பிக்கப்பட்டார். மரணம் அவரை ஆண்டு கொள்ளவோ, அவரை கட்டியோ வைத்திருக்க முடியவில்லை. பாதாளத்தின் வாசல்கள், பாதாளத்தின் வல்லமைகள் ஆட்டம் கண்டு அசைய தொடங்கியது. மரித்த அநேகர், தேவனுக்காய் ஜீவித்த அநேகர் அவரோடே கூட எழுந்திருக்க ஆரம்பித்தார்கள்.

ஒரு குறிப்பிட்ட பட்டணத்தில் ஒரு தேவ ஊழியருடைய மகள் பிரசவ நேரத்தில் மரித்துப் போனாள். எல்லாரும் அந்த மருத்துவமனையில் கூடி அழுது கொண்டிருந்தார்கள். அந்த பிரேதம் சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த போதகரோ சோர்ந்து போகாமல் அந்த துக்கத்திலும் தன் நண்பர்களைச் சேர்த்துக் கொண்டு சத்தமாய் பாட்டுபாடி தேவனை நோக்கி ஜெபிக்க ஆரம்பித்தார். ஏறக்குறைய அரைமணி நேரம் கடந்திருக்கும் அந்த மரித்த மகளுடைய சரீரம் அசைய ஆரம்பித்தது. மறுபடியும் செயல்பட ஆரம்பித்தது. இயேசுவே, இயேசுவே என்று அவள் கூச்சலிட்டாள். மரித்த அவள் உயிரோடு எழுந்து இன்றைக்கும் ஜீவிக்கிறாள். ஆண்டவருக்காக வாழ்ந்து கொண்டிருக்கிறாள். இப்படி தன் காலத்துக்கு முன்னே தேவனுடைய சித்தமில்லாமல் மரிக்கிற ஒவ்வொருவரையும் உயிர்ப்பிக்க, உயிரோடு எழுப்பத்தான் இயேசு சொன்னார் மரித்தேன், ஆனாலும், சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன் என்றார். **யோவான் 5:21-ல் பிதாவானவர் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறது போல, குமாரனும் தமக்கு சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார்** இன்றைக்கும் அவருக்குச் சித்தமானவர்களை உயிரோடு எழுப்பிக்கொண்டு தான் இருக்கிறார்.



jesuslives.in

எகிப்து தேசத்திலே ஒரு இஸ்லாமிய பெண் வேதத்தை வாசித்து இயேசுவை ஏற்றுக்கொண்டதின் நிமித்தம் கணவன் அவளைக் கொலை செய்து பிள்ளைகளோடு கல்லறையில் புதைத்து விட்டான். ஏறக்குறைய பல நாட்களுக்குப் பிறகு அவளும், அவளுடைய பிள்ளைகளும் உயிரோடு எழும்பி விட்டார்கள். இதெல்லாம் நடப்பதற்கு காரணம் என்ன? ஒரே ஒருவருடைய உயிர்த்தெழுதலினால் உண்டானது தான்.

ஒரே மனிதனால் மரணம் வந்தது போல, ஒரே ஒருவராலே உயிர்த்தெழுதலும் வந்தது. முந்தின ஆதாமால் மரணம் வந்தது. பிந்தின ஆதாமோ உயிர்ப்பிக்கிற ஆதாமாக, உயிர்த்தெழுந்தவராக செயல்பட்டார். 1 கொரி 15:45 அப்படிச் சொல்லுகிறது.

இன்றைக்கு அநேகர் பாவத்திலும், அக்கிரமத்திலும் மரித்துக் கிடக்கிற, செத்த பிரேதங்களாகவும், மற்றொரு பக்கம் போராட்டத்திலும், பிரச்சனையிலும் பல காரியங்களிலும் சிக்கி நடைபிணமாக வாழ்ந்து கொண்டிருக்கிறதைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு உயிர்மூச்சைக் கொண்டுவரவும், உயிர்த்தெழுதலைக் கொண்டுவரவும் இயேசு உயிரோடு எழுந்தார். மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன் என்றார். இன்றைக்கு கல்லறை போன்ற வாழ்க்கையிலும், செயல்படாத வாழ்க்கையிலும் இருக்கிறவர்களை உயிரோடு எழுப்புவதற்குத் தான் ஆண்டவராகிய இயேசு உயிரோடு எழுந்தார். நமக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிரோடு எழுந்த தேவன் இன்றைக்கு உயிரோடு இருக்கிறார். யார்? யார் எல்லாம் இந்த உயிர்த்தெழுதலை நம்பி அவருக்கு முன்பாக தம்மைத் தாழ்த்தி, தேவனே, உம்மை நம்புகிறேன் என் உள்ளத்தில் வாரும், எனக்குள் வாசம்பண்ணும், என்னை வழிநடத்தும் என்று கேட்டால் அந்த உயிர்த்தெழுந்த தேவன் நமக்குள் வந்து வாசம்பண்ணுவார்.

லூக்கா 20:38 சொல்லுகிறது அவர் மரித்தோரின் தேவனாயிராமல், ஜீவனுள்ளோரின் தேவனாயிருக்கிறார். எல்லாரும் அவருக்குப் பிழைத்திருக்கிறார்களே என்றார். அவர் மரித்தவருக்கு தேவன் அல்ல, ஜீவனுள்ளோருக்கு தேவன் என்று சொல்லப்பட்டுள்ளது. இன்றைக்கும் அவர் உயிரோடிருக்கிறார். இதைத்தான் யோபு பக்தன் சொன்னார் என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றார். இன்றைக்கும் நாம் உயிரோடிருந்து லூக்கா 1:71-ல் சொல்லப்பட்டுள்ளபடி உங்கள் சத்துருக்களின் கைகளினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் எனக்கு முன்பாகப் பரிசுத்தத்தோடும், நீதியோடும் எனக்கு ஊழியஞ்செய்ய கட்டளையிடுவேன் என்றார்.

**இன்றைக்கு கல்லறை போன்ற வாழ்க்கையிலும், செயல்படாத வாழ்க்கையிலும் இருக்கிறவர்களை உயிரோடு எழுப்புவதற்குத் தான் ஆண்டவராகிய இயேசு உயிரோடு எழுந்தார்.**

இன்றைக்கு நாம் உயிரோடிருந்து, அந்த உயிரோடிருக்கிற ஆண்டவராகிய தேவனுக்கு ஊழியம் செய்து, அவர் வாழ்கிறார், ஜீவிக்கிறார் என்பதை செத்துமடிந்து கொண்டிருக்கிற ஜனங்களுக்கும், பலவிதமான போராட்டங்களில் வாழ்கிற ஜனங்களுக்கும் இயேசு வாழ்கிறார், உயிரோடிருக்கிறார் என்பதை அறிவித்து, நிரூபித்து, அவருக்கு மகிமையாக, ஒரு சந்ததியை எழுப்ப வேண்டும். யோபு வாழ்க்கையில் ஒரு புது வாழ்வு தொடங்கினது போல, தேவனைப் பின்பற்றுகிறவர்களுடைய வாழ்க்கையில் ஒரு புதுவாழ்வு தொடங்கவும், புதிய காரியங்களைப் பெற்றுக் கொள்ளவும் வழி நடத்த வேண்டும். என் ஆண்டவராகிய தேவன் தாமே ஜீவனுள்ள தேவனாய் இருந்து உங்களை மகிமையால் நிரப்பி நடத்துவாராக. ஆமென்.



jesuslives.in



செம்பட்டியில்
புனித வெள்ளி தினத்தில்
இயேசுவின்
பாதத்தில்
ஏப்ரல்
7
வெள்ளிக்கிழமை
@10:00Am
இடம்
வானத்தின் வாசல்,
எழுப்புதல் ஜெப மையம்,
செம்பட்டி, திண்டுக்கல்
ஆசீர்வாத
உபவாச ஜெபம்
உங்கள்
குடும்பத்திற்காக!, அற்புதத்திற்காக!, விடுதலைக்காக!,
சுகத்திற்காக! மன்றாட்டு ஜெபம்
செம்பட்டி பேருந்து நிலையத்திலிருந்து 11.30AM மணி
வரைக்கும் ஜெப மையத்திற்கு வாகன வசதி உண்டு
ஏப்ரல்
8
சனிக்கிழமை
@10:00Am
இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்
jesuslives.in



# கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி, உன் சத்துருக்களை விலக்கினார்

சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள்! பலவிதமான கஷ்டங்களில் கடந்து போகும்போது என்ன ஆக்கினையோ! என்று சொல்வார்கள். செப் 3:15-ல் கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி, உன் சத்துருக்களை விலக்கினார். இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார். இனித் தீங்கை காணாதிருப்பாய் என்ற அற்புதமான வாக்குத்தத்தத்தை வாசிக்கிறோம். இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் நம் நடுவில் இருந்து, இது வரை நாம் அனுபவித்த எல்லா ஆக்கினைகளையும் அகற்றி, நமக்கு விரோதமாய் எழும்பின சத்துருக்களை விலக்குவார். இனி நாம் தீங்கைக் காண்பதில்லை. ஆக்கினை என்று சொல்லும் போது தண்டனை என்று நமக்குத் தெரியும். இயேசுவோடு சிலுவையில் இரண்டு கள்ளர்களை அறைந்தார்கள். ஒருவன் ஆண்டவரைத் தூஷிக்கிறான். நீ கிறிஸ்துவானால் உன்னையும், எங்களையும் காப்பாற்றலாமே! என்று இகழ்கிறான். அந்த நேரத்தில் மற்றொருவன் லூக் 24:40,41-ல் நீ இந்த ஆக்கினைக் குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம். நாம் நடப்பித்தவைகளுக்கு தக்க பலனை அடைகிறோம். இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனை கடிந்து கொள்கிறான். இந்த ஆக்கினை என்பது தண்டனையைக் குறிக்கிறது. இன்னும் யோசேப்பு பொய்குற்றம் சாட்டப்பட்டு, சிறைச்சாலையில் இருக்கும்போது, பார்வோனின் வேலைக்காரர்கள் தவறு செய்ததால் சிறைக்குள் இருந்தார்கள். ஆதி 40:19-ல் அவர்கள் கண்ட சொப்பனத்தின் அர்த்தத்தை விளக்கும்போது பார்வோன் உன்னை மரத்திலே தூக்கிப்போடுவார் என்றான். எஸ்தரின் சரித்திரத்தில் ராஜாவை கொலைசெய்ய இரண்டு பேர் திட்டமிட்டுக் கொண்டிருந்ததை மொர்தெகாய் கவனித்து ராஜாவிடம்



jesuslives.in

தெரியப்படுத்தும் போது, அது உண்மை தான் என்று உறுதி செய்யப்பட்டபோது எஸ்தர் 2:23-ல் அவர்கள் இரண்டு பேரும் தூக்கிலிடப்பட்டார்கள். பாவத்திற்கும், அக்கிரமத்திற்கும் வரும் தண்டனைக்கு பெயர்தான் ஆக்கினை. 2 பேதுரு 2:9-ல் பேதுரு, கர்த்தர் தேவ பக்தியுள்ளவர்களை சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார். அக்கிரமக்காரருக்கு ஆக்கினைத் தீர்ப்பு உண்டு என்று எழுதுகிறார். நாமெல்லாரும் பாவம் செய்து, அக்கிரமங்களை நடப்பித்தோம். நம் அக்கிரமங்களுக்கு ஏற்ற தண்டனை நமக்கு இருந்தது. ஆனால் இயேசு அக்கிரமக்காரரில் ஒருவராய் எண்ணப்பட்டு நமக்காக அந்த தண்டனைகளைச் சிலுவையின் மேல் சுமந்து, நம் ஆக்கினைகளை அகற்றினார். யார் மேல் இந்த ஆக்கினை இருக்கிறது. நாம் அந்தப் பட்டியலில் இருக்கிறோமா? இயேசு எப்படி அதை நீக்குகிறார் என்று பார்ப்போம்.

## மாம்சத்தின்படி நடந்தால் ஆக்கினை

பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை என்கிறார். ரோமர் 8:1 அப்படியானால் மாம்சத்தின்படி நடந்தால் ஆக்கினை உண்டு.



கலா 5:19-21 இந்த மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கிறது. விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரக ஆராதனை, பில்லிசூன்யம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள் சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் இப்படிப்பட்டவைகளை செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை என்று மாம்சத்தின் கிரியைகளை அடுக்குகிறார். மாம்சசிந்தை மரணம். மாம்சத்திற்குரியவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்க மாட்டார்கள். 2 கொரி 10:3-6-ல் நாம் மாம்சத்திலிருந்தாலும் மாம்சத்தின்படி போர் செய்கிறவர்கள் அல்ல. திருவிருந்தில் அப்பமும், ரசமும் நாம் எடுக்கும்போது இவ்விதமான எந்த குற்றமும் இல்லாமல் நாம் எடுக்க வேண்டும். 1 கொரி 11:29-ல் அபாத்திரமாய் அதாவது தகுதியில்லாமல் ஏதோ ஒரு மாம்ச கிரியையில் இருந்து கொண்டு, இயேசுவுக்கு முன்பாக அறிக்கை செய்யாமல், இயேசுவின் இரத்தத்தால் கழுவப்படாமல், அப்பம் ரசம் எடுத்தால் நமக்கே நாம் ஆக்கினை உண்டு பண்ணிக் கொள்கிறோம் என்று எழுதுகிறார். அதனால் நாம் தவறுகளை ஆண்டவருக்கு முன்பாக அறிக்கையிட்டு அக்கிரமத்திற்கும், அசுத்தத்திற்கும் அடிமையாக ஒப்புக்கொடுத்த நம் அவயங்களை ஆவியின்படி நடக்க, பரிசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தால் ஆக்கினைக்குத் தப்புவோம். மாம்சத்தின் கிரியையில் முதலாவது நீதி 28:20-ல் ஐசுவரியவானாவதற்குத் தீவிரிக்கிறவனோ ஆக்கினைக்குத் தப்பான். நாம் உயிர்வாழ பணம் அவசியம் தேவை. பிள்ளைகளுக்கு பெற்றோர் தான் சேமிக்க வேண்டும். படிப்பு, வேலை, திருமணம், வீடு ஆஸ்தி தேவையானது தான். ஆனால் எந்நேரமும் சாப்பிடாமல், தூங்காமல், பணம், பணம் என்றே ஓடிக்கொண்டிருக்கிறவர்கள் ஆக்கினைக்குத் தப்புவதில்லை. லூக் 12:16-21 ஒரு மனிதனுடைய நிலம் நன்றாய் விளைந்தது. என் களஞ்சியத்தை இடித்து பெரிதாக்குவேன் என்ற அவனை மதிகேடனே! இன்றைக்கு உன் ஆத்துமா உன்னைவிட்டு எடுத்துக்கொள்ளப்படும். அப்போது நீர் சேர்த்தவை யாருடையதாகும். உலகமெல்லாம் ஆதாயமாக்கினாலும் தன் ஆத்துமாவை கெடுத்து நஷ்டப்படுத்தினால் என்ன லாபம் என்றார்.



jesuslives.in

சரீரத்திற்காகவே ஓடி ஆத்துமாவைப் பற்றி கவலையில்லாமல் ஐசுவரியவானாக ஓடாதே! என்கிறார். ஆத்துமாவுக்கு ஏற்ற ஜெபம், வேத தியானம், பரிசுத்த ஆவியின் நிறைவு இதையெல்லாம் பற்றி அக்கறை எடுத்துக் கொள்ளாமல், பணத்தை மட்டுமே குறிக்கோளாய்க் கொண்டு ஓடாமல், இந்த மாம்ச கிரியையை மேற்கொண்டால் நாம் ஜெயமெடுக்கலாம்.

அடுத்து ஒரு மாம்சகிரியையைப் பாருங்கள். **நீதி 6:29 பிறருடைய மனைவியினிடத்தில் பிரவேசிப்பவனும், அப்படியே அவளைத் தொடுகிறவனும் ஆக்கினைக்குத் தப்பான்.** இந்தக் காரியம்தான் எங்கும் காணப்படுகிற பொல்லாத அக்கிரமமாயிருக்கிறது. வாலிபர்கள், கன்னிகைகள் ஏராளமாய் இந்த இச்சைகளில் விழுந்து கிடக்கிறார்கள். தனக்கு ஒரு மனைவி இருக்கும்போது இன்னுமொரு பெண்ணை, இன்னொருத்தருடைய மனைவியுடன் தொடர்பு வைப்பது, தனக்கு கணவன் இருக்கையில் இன்னொருவர் வாழ்க்கையில் பிரவேசித்து அந்த குடும்பத்தின் சமாதானத்தைக் குலைத்தால் சர்வ வல்லவர் அமைதியாய் இருப்பாரோ! அவன் (அவள்) ஆக்கினைக்குத் தப்பான் என்று ஆண்டவர் சொல்கிறார்.



சினிமாவில் நன்றாகப் பாடக்கூடிய, ஆண்டவரை அறியாத சகோதரி, ஒருவருடன் நட்புகொண்டு பிள்ளையும் பெற்றாள். ஒருநாள் ஆண்டவர் இயேசுவைக் கேள்விப்பட்டு தன் வாழ்வை ஆண்டவருக்கு அர்ப்பணித்து இனி வேறு எந்தப்பாடலும் பாடுவதில்லை. இயேசுவுக்காக மட்டும் பாடுவேன் என்று வாழ்ந்தார்கள். ஒருநாள் தன்னோடு இருப்பவர் வேறொரு பெண்ணின் கணவர், இவரோடு நான் வாழ்வது தவறு என்று உணர்த்தப்பட்டு, தன்னுடைய பெண்ணோடு தனியாக வாழ உறுதி எடுத்து, அந்தத் தொடர்பைத் துண்டித்துக் கொண்டார். அந்த குடும்பம் என்னால் பாதிக்கப்பட்டதே! இனி ஒரு போதும் இந்தத் தவறை நான் செய்யமாட்டேன் என்று இயேசுவுக்காக தன் வாழ்வை கொடுத்து விட்டார்கள். அந்த சகோதரியை நான் நேரில் பார்த்திருக்கிறேன். இயேசுவுக்காக அவர்கள் பாடும் பாடலில் அவ்வளவு இனிமையான கிருபை பாய்ந்தோடும். தாவீது உரியாவின் மனைவியை அபகரித்து, அவளை கர்ப்பமாக்கி பிள்ளைப் பிறந்தபோது கர்த்தர் அந்தப் பிள்ளையை அடித்தார். அது வியாதிப்பட்டு கேவலமாய் இருந்து மரித்தது என்று வேதம் சொல்கிறது. தவறான தொடர்புகள், இச்சைகள், தேவன் அருவருக்கும் ஒரு கொடிய மாம்சகிரியை அது, நமக்குள் யாருக்கும் இராதபடி மனம் திரும்பவேண்டும்.

அடுத்து, **நீதி 12:2 துர்சிந்தையுள்ள மனுஷனை அவர் ஆக்கினைக்குட்படுத்துவார்.** நல்ல சிந்தையும், நல்ல எண்ணங்களும் நம் வாழ்வில் உண்டாகணும். மற்றவர்கள் மேல் பொறாமை, தன்னைப் பற்றி மேட்டிமை, பெருமை, மற்றவர்களை மதிக்காமல் வாழ்கிற வாழ்வு இதெல்லாம் பிசாசினால் உண்டான சிந்தை. அப் 8:17-24 ஒரு சம்பவம் உள்ளது. அப்போஸ்தலர்கள் யார் மேலெல்லாம் கைகளை வைத்தார்களோ அவர்களெல்லாம் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வதைப் பார்த்த **சீமோன் என்பவன் பணத்தைக் கொண்டு வந்து நான் எவன் மேல் கைகளை வைக்கிறேனோ அவன் பரிசுத்த ஆவியைப் பெறத்தக்கதாய் எனக்கும் அந்த அதிகாரத்தை தரவேண்டும் என்றான். பேதுரு தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே பெறமுடியாது. நீ அப்படி நினைத்தபடியால் உன் பணம் உன்னோடே நாசமாகக்கடவது. உன் இருதயம் தேவனுக்கு முன்பாக செம்மையாய் இல்லை. நீ உன் துர்க்குணத்தை விட்டு மனம் திரும்பி தேவனை நோக்கி வேண்டிக்கொள்.**


jesuslives.in

ஒரு வேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம் என்கிறான். நம் சிந்தையில், இருதயத்தின் எண்ணங்களில் நமக்குப் பரிசுத்த வேண்டும். நான் அப்படி சிந்திப்பது, நினைப்பது, எண்ணுவது பாவம் என்று உணர்ந்து மனம் திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக் கொண்டால் நாம் மன்னிப்பு பெறமுடியும். தங்களையே புத்திமான், நீதிமான் என்று எண்ணிக்கொண்டு மற்றவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்று அற்பமாய் நினைப்பது நம்மை விட்டு நீங்க வேண்டும். ஏன் இந்த சிந்தை நமக்குள் வருகிறதென்றால் ரோம 1:21-ல் தேவனை மகிமைப்படுத்தாமல், ஸ்தோத்தரியாமல் இருக்கும் போது இந்த சிந்தை வீணாகிறது. இருள் மூடுகிறது. தவறான துர்ச்சிந்தைகள் மேலோங்குகிறது. இதனால் வரும் ஆக்கினைக்கு நாம் தப்பவேண்டும். அடுத்து நீதி 19:5-ல் பொய் சாட்சிக்காரன் ஆக்கினைக்குத் தப்பான். ஆண்டவர் கட்டளைகளில் ஒன்று பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக. எதற்கெடுத்தாலும் பொய் பேசுகிறவர்களுண்டு. இது ஒரு ஆவி. யோவான் 8:44-ல் அவன் பொய்யனும், பொய்க்கு பிதாவுமாயிருக்கிறான். அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான் என்றார். உண்மையாய் நேரில் பார்த்தது போலவே இப்படித்தான் இருக்கும் என்று மனதில் யூகித்துப் பேசுவது. யாக் 5:12-ல் நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு உள்ளதை உள்ளதென்றும், இல்லாததை இல்லை என்றும் சொல்லக்கடவீர்கள் என்கிறார். அனனியா, சப்பீராள் என்ற தம்பதிகள் இடத்தை விற்று அப்போஸ்தலர் பாதத்தில் வைத்தார்கள். பேதுரு நிலத்தை இவ்வளவுக்குத்தான் விற்றீர்களா என்றபோது பாதிப்பணத்தை மறைத்து வைத்துவிட்டு ஆமாம்! இவ்வளவுதான் என்றார்கள். உடனே அங்கே அதே இடத்தில் மரணம். அவர்கள் ஆக்கினைக்கு தப்பவில்லை. அப் 5:3 பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன என்று பேதுரு கேட்கிறார். பொய்யைப் பேசி அந்த நேரம் தப்பித்துவிடலாம் என்று சாத்தான் இந்த மாம்சக் கிரியையை நம்மில் விதைக்கிறான். இல்லை, நம்முடைய தேவையற்ற பேச்சு, நமது பொய்நாவு இதற்கு தேவனிடத்தில் ஆக்கினை உண்டு. அதை விட்டு நாம் மனம் திரும்ப வேண்டும். அடுத்து நீதி 19:19 கடுங்கோபி ஆக்கினைக்குள்ளாவான். கோபம் இல்லாத மனிதர்களை நாம் பார்க்க முடியாது. இது ஒரு ஜென்ம சுபாவம். வழி வழியாய் வருவது. பிறந்த குழந்தை முதல் முதியவர் வரை கோபம் யாரையும் விட்டு வைப்பதில்லை. எண் 20:10, 11-ல் தண்ணீர் இல்லாமல் இஸ்ரவேல் ஜனங்கள் முறுமுறுத்தபோது ஆண்டவர் மோசேயிடம் கன்மலையைப் பார்த்து பேசு என்றார். ஆனால் ஜனங்கள் மேல் கோபம் கொண்ட மோசே கன்மலையை இரண்டு தரம் அடித்தான். தண்ணீர் வந்தது. ஆனால் மோசே அந்த கானானுக்குள் நீ ஜனங்களை கொண்டு போவதில்லை. என்னை நீ விசுவாசித்து என் நாமத்தை பரிசுத்தம் பண்ணவில்லை, கடும் கோபத்துக்கு இடம் கொடுத்து விட்டாயே என்றார் எத்தனை வருட பிரயாசம் இந்த ஒரு சுபாவத்தினால் கானானுக்குள் போகும் பாக்கிய-த்தையே மோசே இழந்து விட்டான். ஆனால் தேவன் மோசே மீது வைத்த அன்பினால் அவனை நேபோ மலைகளில் ஒன்றில் அவரே அடக்கம் செய்தார். என்று வேதம் சொல்லுகிறது. ஒவ்வொரு முறையும் இஸ்ரேலுக்கு போகும்போது ஜோர்டானில் அந்த நேபோ மலையில் சகோதரர் சிறிய செய்தி கொடுத்து ஜெபிப்பார்கள். ஆண்டவரே! எங்களையும் உமது சாந்தமுள்ள ஆவியால் நிரப்பும் என்று அர்ப்பணிப்போம். இந்த மாம்சத்தின்படி நடவாமல் இதைப் போன்ற இன்னும் எத்தனையோ கிரியையை நாம் ஆவியினாலே அழித்தால் ஆக்கினைக்கு தப்பலாம். எபி 2:4-ல் இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றி ருப்போமானால் தண்டனைக்கு





jesuslives.in

எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம் என்று சொல்லப்பட்டுள்ளது.

## விசுவாசிக்காவிட்டால் ஆக்கினை

கிறிஸ்தவ வாழ்வு விசுவாசத்தில்தான் ஆரம்பிக்கிறது. மாற் 16:16-ல் விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். ஒரு இந்துவாய் பிறந்தால் இந்துவாய் வாழலாம். இஸ்லாமியராய் பிறந்தால் இஸ்லாமியராய் இருந்து விடலாம் ஆனால் கிறிஸ்தவர்களாய் பிறந்து பரம்பரையாய் ஆலயத்திற்கு போய் வருவதால் மட்டும் நாம் கிறிஸ்தவர்களாய் இருக்க முடியாது. கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்து அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் தான் தேவனுடைய பிள்ளைகள். அவர்கள் எந்த ஜாதி, எந்த மதம், என்ன மொழி என்ற வித்தியாசமே இல்லை. எபி 11:6-ல் விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும். மோசே கன்மலையைப் பார்த்து பேச வேண்டியதற்குப் பதிலாக கன்மலையை இரண்டு தரம் அடித்தான். தேவன் என்னை பரிசுத்தம் பண்ணும்படி, நீங்கள் என்னை விசுவாசியாமற் போனீர்கள் என்றார். நாம் கூட பிரச்சனைகள் வந்த உடன் விசுவாசமாய் ஜெபம் பண்ணி, ஆண்டவரிடம் பேசுவதற்குப் பதிலாக எத்தனை ஆயிரக்கணக்கான முறை தேவனை சுயத்தினால் அடிக்கிறோம். யோவா 3:18, 5:24-லும் இயேசு சொல்கிறார். என்னை விசுவாசிக்காவிட்டால் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று. என் வசனத்தைக் கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று சொன்னார். மாற் 3:29-ல் ஒருவன் பரிசுத்த ஆவிக்கு விரோதமாய் தூஷணம் சொல்வானாகில் அவன் என்றென்றைக்கும் மன்னிப்படையாமல் நித்திய ஆக்கினைக் குள்ளாயிருப்பான் என்று இயேசு சொன்னார். பரிசுத்த ஆவியானவரை நம்பாமல் அல்லேலூயா கூட்டம், பெந்தெகோஸ்தே கூட்டம் என்று ஆவியானவரை, அந்நியபாஷைகளை, தூஷிக்கிற, பரிகசிக்கிறவர்களுக்கு ஆக்கினை என்று வேதம் சொல்லுகிறது. தேவனை, அவரது வசனத்தை பரிசுத்த ஆவியை விசுவாசிக்காமல் இருந்தால், அவரை தூஷித்தால் ஆக்கினை என்று உணர்ந்து இயேசுவை, அவர் வசனத்தை விசுவாசிக்க நம்மை அர்ப்பணிப்போம். மத் 25:42-46-ல் பசியாயிருந்தேன் நீங்கள் எனக்கு போஜனம் கொடுக்கவில்லை, தாகமாயிருந்தேன் நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை, அந்நியனாயிருந்தேன் நீங்கள் என்னை சேர்த்துக் கொள்ளவில்லை, வஸ்திரம் இல்லாதிருந்தேன் நீங்கள் எனக்கு வஸ்திரம் கொடுக்கவில்லை, வியாதியுள்ளவனாயும், காவலிலடைக்க பட்டவனாயும் இருந்தேன் நீங்கள் என்னை விசாரிக்க வரவில்லையென்று நல்ல கிரியைகளை செய்யாதிருந்த அவர்கள் 46-ம் வசனத்தில் நித்திய ஆக்கினையை அடைவார்கள் என்று இயேசு சொன்னார். இந்த நல்ல கிரியைகள் நம்மிடம் உண்டா? நம்மால் இயன்றதை மற்றவர்களுக்கு செய்து ஆக்கினைக்குத் தப்புவோம். இந்தத் தண்டனைகள், ஆக்கினைகள் எல்லாம் நம்மேல் இருக்கும்போது நாம் என்ன செய்வது என்று பார்ப்போம்.

**தேவனை, அவரது வசனத்தை பரிசுத்த ஆவியை விசுவாசிக்காமல் இருந்தால், அவரை தூஷித்தால் ஆக்கினை என்று உணர்ந்து இயேசுவை, அவர் வசனத்தை விசுவாசிக்க நம்மை அர்ப்பணிப்போம்.**

## விசுவாசிக்காவிட்டால் ஆக்கினை

இதுவரை அறிந்தும், அறியாமலும் எத்தனையோ ஆக்கினைகளை நாம் சுமந்து, அனுபவித்து போய்க் கொண்டிருக்கலாம். ஆனால், ஒரு நற்செய்தி

ஏசா 53:5-ல் நம்முடைய மீறுதலுக்காய், இயேசு காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களுக்காய் அவர் நொறுக்கப்பட்டார். நமக்கு சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. என்னோட ஆக்கினைகளை எல்லாம் இயேசு சுமந்து விட்டார் என்று விசுவாசித்து அவரை நோக்கிப் பார்த்து ஜெபித்தால் இந்த எல்லா ஆக்கினையிலிருந்தும் நமக்கு விடுதலை உண்டு. இயேசு நமது பாவங்களையும், அதனால் வந்த தண்டனைகளையும் தான் சிலுவையில் சுமந்தார்.

ஏசா 26:16-ல் கர்த்தாவே நெருக்கத்தில் உம்மைத் தேடினார்கள். உம்முடைய தண்டனை அவர்கள் மேலிருக்கையில் அந்தரங்க வேண்டுதல் செய்தார்கள் என்ற வசனத்தின்படி தண்டனை என் மேலிருக்கிறது. நான் அதைச் சுமந்து களைத்து போயிருக்கிறேன் என்கிறீர்களா? தேவனை நோக்கி ஜெபம் பண்ணுங்கள். லேவி 26:41-ல் பிற்பகுதியில் அவர்கள் தங்களைத் தாழ்த்தி, தங்கள் அக்கிரமத்துக்கு கிடைத்த தண்டனையை நியாயம் என்று ஒத்துக்கொண்டால் என் உடன்படிக்கையை நினைப்பேன் என்று கர்த்தர் சொல்கிறார். யோவா 8:10,11-ல் விபச்சாரத்தில் பிடிபட்ட ஒருபெண் இயேசுவிடம் குற்றம் சாட்டப்பட்டுக் கொண்டு வரப்பட்டபோது, ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க வில்லையா? நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை. நீ போ! இனிப்பாவம் செய்யாதே என்றார். இயேசுவின் முன்னால் நாம் நின்றுவிட்டால் மனிதர் முன்பாக நாம் நிற்க மாட்டோம். அவர் நம் ஆக்கினைகளை அகற்றும்படி சிலுவையின்மேல் நமது ஆக்கினைகளைச் சுமந்து தீர்த்தார். நம்மை நலமாக்கும் தண்டனை இயேசுவின் மேல் விழுந்தது. இயேசுவே! என் பாவங்கள், அக்கிரமங்களால் வந்த தண்டனையை எனக்காக நீர் சுமந்தீரே! எனக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை உம்மேல் விழுந்ததே! என் ஆக்கினைகளை அகற்றி, சத்துருக்களை என்னை விட்டு விலக்கிவிடும் என்று ஜெபியுங்கள். உங்கள் மேல் தேவகிருபை இறங்குகிறது. இயேச எல்லாத் தண்டனைகளையும் சுமந்து கொண்டு உங்களை விடுவிக்கிறார். நம்புங்கள்! இயேசு உங்களைக் கைவிடமாட்டார், வெறுத்து விடமாட்டார், தமது சமாதானத்தை உங்களுக்குத் தருகிறார். இனி பாவம் செய்யாதே! என்கிறார். நம்மை அர்ப்பணிப்போம். செப் 3:13,14-ல் அவர்கள் அநியாயம் செய்வதில்லை, பொய்பேசுவதில்லை, வஞ்சக நாவு அவர்கள் வாயில் கண்டுபிடிக்கப்-படுவதில்லை, சீயோன் குமாரத்தியே மகிழ்ந்து கெம்பீரித்திடு என்கிறார். என் ஆண்டவர் தாமே உங்கள் எல்லா ஆக்கினைகளையும், சாபங்களையும், நீக்குவாராக!

> **இயேச எல்லாத் தண்டனைகளையும் சுமந்து கொண்டு உங்களை விடுவிக்கிறார். நம்புங்கள்! இயேசு உங்களைக் கைவிடமாட்டார், வெறுத்து விடமாட்டார், தமது சமாதானத்தை உங்களுக்குத் தருகிறார்.**



jesuslives.in

இயேசு வாழ்கிறார் ஊழியத்தின் புதிய பரிமானம்

# SCHOOL OF EVANGELISM

## சுவிசேஷ பயிற்சிப் பள்ளி

### நீங்கள் சுவிசேஷகராக விருப்பமா?







## வாருங்கள் சுத்த சுவிசேஷத்தை பரவச் செய்வோம்


சுவிசேஷப்பயிற்சிப் பள்ளியின் நோக்கம் என்னவென்றால் சுவிசேஷத்தை அறிவிப்பவர்கள் குறைந்து விட்டார்கள், சுவிசேஷ ஊழியம் மங்கிக் கொண்டிருக்கிறது. தேசத்தின் இருளான நிலையை மாற்ற, சுவிசேஷத்தை எங்கும் அறிவிக்கிற, சுவிசேஷ தலைமுறையை எழுப்ப வேண்டும், அவர்கள் முறையாக, தெளிவாக சுவிசேஷம் அறிவிப்பதற்கும், புரிந்து கொள்வதற்கும், அந்த தரிசனத்தைப் பெற்றுக் கொண்டு வளர்வதற்கும், தேவன் தன் கையில் கொடுத்திருக்கும் பணியை மிகச்சிறப்பாக செய்வதற்கு உதவுவதாகும்.

**வருடத்திற்கு நான்கு அணிகளாக (ஜனவரி, ஏப்ரல், ஜீலை, அக்டோபர்)**
**ஆகிய மாதங்களில் சுவிசேஷ பயிற்சிப்பள்ளி நடைபெறுகிறது 6 நாட்கள், 6 பயிற்சியாளர்கள்**

உடனே படிவத்தை
பூர்த்தி செய்யுங்கள்
soe.jesuslives.in
மேலும் தொடர்புக்கு:
9498000449

### பயிற்சியை பற்றிய தகவல்கள்

- நீங்கள் மிகுந்த ஜெபத்துடன் முகாமில் பங்கு கொள்ள வேண்டும்
- பயிற்சியின் ஆறு நாட்களும் தலைசிறந்த சுவிசேஷகர்களால் உங்களுக்கு பயிற்சி வழங்கப்படும்.
- தினமும் இரண்டு பகுதியாக ஜெபமும், களப்பணியும் பயிற்சி தரப்படும்
- தங்கும் இடம் மற்றும் மூன்று வேலை உணவும் வழங்கப்படும்
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பெண்களுக்கு தனியாக தங்குமிடம் உண்டு.



# நீ விடுதலையாகி பறந்திடு, வெற்றி சிறந்திடு

சகோதரி. பிரேமாடேவிட்

**கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலும் எங்களைக் கொண்டு, அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம். 2 கொரி 2:14**

கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிபத்தம்பி, தங்கைகளே நம்மை விடுதலை பண்ணுவதற்காக, நமக்காக மரித்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்த நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். ஒரு ஈஸ்டர் ஞாயிறு அன்று போதகர் ஒருவர் ஒரு பழைய கிளிக்கூண்டை ஆலயத்திற்குக் கொண்டு வந்து பிரசங்கப் பீடத்திற்கு மேல் வைத்தார். சபை மக்கள் எல்லாம் கேள்விக் குறியோடு பார்த்ததும் போதகர் பேசத் தொடங்கினார். நான் ஆலயத்திற்கு வரும்பொழுது ஒரு சிறுவன் இந்தக் கிளிக்கூண்டை கையில் பிடித்தவாறு சுற்றிக் கொண்டே வந்தான். அக்கூண்டின் அடியில் மூன்று கிளிகள் பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். அச்சிறுவனிடம் அதில் என்ன? உள்ளது என்று கேட்டேன். வயதான மூன்று கிளிகள் என்றான். இதை வைத்து என்ன செய்யப் போகிறாய் என்று கேட்டதற்கு,

அவன் சிரித்துக் கொண்டே இவைகளை வீட்டிற்கு கொண்டு சென்று விளையாடுவேன், அவற்றின் இறகுகளையெல்லாம் பிடுங்கியெடுத்து, அவைகளை கோபமூட்டி ஒன்றோடொன்று சண்டையிடச் செய்து வேடிக்கைப் பார்ப்பேன். கடைசியில் அவைகளை நான் வளர்க்கும் பூனைக்கு உணவாகக் கொடுப்பேன் என்றான். மகனே இவைகளை எனக்கு விலைக்குத் தருவாயா? என்று அவர் கேட்டதற்கு, அவன் ஐயா, இது பாடாது, அழகாகவும் இல்லை. இவைகள் சாதாரணமானவைகள் என்றான். அதற்கு நான் விலையை மட்டும் சொல் என்றேன். ரூபாய் 100 என்றான். நான் கூண்டுடன் மெல்ல நடந்தேன். சிறுவனோ பணத்துடன் பறந்தான். நான் ஆலயத்தின் அருகில் இருந்த மரத்தில் பறவைகளை விடுதலையோடு பறக்க விட்டேன் என்று சொல்லி பிரசங்கத்தைத் தொடர்ந்தார்.

## விலைக்கிரயம் செலுத்தப்பட்டால் நீ, விடுதலையாய் வாழ முடியும்

ஆதலால் பிள்ளைகள் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும், அவர்களைப் போல மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவரானார். மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கு, ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும், விடுதலை பண்ணும்படிக்கு அப்படியானார். எபிரே 2:14,15 தன்னுடைய பிள்ளைகளாகிய ஆதாமையும், ஏவாளையும் தன் வலையில் சிக்க வைத்தப்பின், சாத்தான் இயேசுவை பார்த்து இயேசுவே, நான் முழு உலகத்தையும், என் ஆளுகைக்குள் கொண்டு வந்து விட்டேன். வயது வரம்பில்லாமல் அனைவரையும் பிடித்து விட்டேன். ஒருவர் கூட என்னை எதிர்த்து நிற்கவில்லை என்றான் ஆனவத்தோடு, இயேசு அமைதியான குரலில் அவர்களை வைத்து என்ன? செய்யப் போகிறாய் என்று கேட்டார். ஓ!, அதுவா, நான் அவர்களுக்கு சண்டையிடுவது எப்படி, குடிப்பது, புகைப்பது எப்படி என்றெல்லாம் சொல்லித் தருவேன். இதுமட்டுமா, எப்படி துப்பாக்கிக் குண்டுகள் செய்வது, எப்படி கொலை செய்வது, கொள்ளையடிப்பது என்றெல்லாம் சொல்லித் தருவேன் என்றான். இயேசு வேதனையோடு பிறகு என்றார். அவர்களைத் தற்கொலைக்கு நேராக நடத்தி கொன்று விடுவேன். விபத்துக்கள், ஆபத்துக்களை ஏற்படப்பண்ணி மரிக்கச் செய்து நரகம் கொண்டு செல்வேன் என்றான். விலைக்கிரயமாக நான் உனக்கு என்ன தந்தால் நீ, எனக்கு இவர்களைத் தருவாய் என்று கேட்டார் இயேசு. அதற்கு சாத்தான் ஐயா, இவர்கள் உங்களுக்கு வேண்டாம், இவர்கள் நல்லவர்கள் இல்லை. உங்கள் முகத்தில் துப்புவார்கள், உங்களைச் சபித்து, காயப்படுத்தி சிலுவையில் அறைந்து கொன்று விடுவார்கள் என்று மூச்சு விடாமல் சொன்னான். இது எதையும் காதில் வாங்காமல் இயேசு சாத்தானை, உனக்கு எவ்வளவு வேண்டும் அதை மட்டும் சொல் என்றார். சாத்தான் ஏளனத்தோடு இயேசுவைப் பார்த்து விலைக்கிரயமாய் உம் கண்ணீர் முழுவதும், உம் சரீரத்தில் உள்ள இரத்தம் முழுவதும் என்று கேட்டான் என்று அந்த போதகர் தன்னுடைய செய்தியில் சொல்லிய பின்பு, அந்த கூண்டின் கதவுகளைத் திறந்து காலியாக உள்ள கூண்டை சபையாருக்கு காண்பித்து, இப்படித்தான் இயேசுவும் நம்மை விடுதலையாக்கி இருக்கிறார் என்றார். இது ஒரு பக்தருடைய சிலுவை தியானம் மட்டுமல்ல யோபுவின் வாழ்க்கையில் நடந்த உரையாடலைப்




jesuslives.in

போலத்தான் இயேசுவின் வாழ்க்கையிலும் நடந்திருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. பாவமான எண்ணங்களிலிருந்தும், பாவபழக்க வழக்கங்கள் அதன் தண்டனைகளிலிருந்தும் நாம் இருக்கிறதற்கு சாகலாம், வாழவே பிடிக்கல என்று உங்களுக்கு, நீங்களே சொன்ன சாபங்கள், பெற்றோரோ, பெரியவரோ சொன்ன, செய்த பாவ சாபங்கள், தேவனுடைய கட்டளைகளை மீறும் போதும், சாத்தானின் தீய செயல்களோடு தொடர்பு வைத்துக் கொள்ளும் போதும், வரும் விளைவுகளிலிருந்தும் உங்களை விடுதலையாக்கவும், மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனை அழிக்கும்படிக்கும், மாம்சத்தையும், இரத்தத்தையும் உடைய உங்களை நேசித்து, அவரும் உங்களைப் போலவே, நம்மைப் போலவே மாமசமும், இரத்தமும் உடையவராய் மனுஷனாகப் பிறந்து, நம்மைப் போலவே பல கஷ்டங்களைப்பட்டு பாவம் மட்டும் செய்யாமல் நமக்காக பலியானார். இயேசு எனக்காகத்தான் மரித்தார், என்னை வாழவைக்கவே உயிரோடு எழுந்தார் என்று இருதயத்தில் நம்பி, உங்கள் வாயைத்திறந்து இயேசுவே என் பாவங்களை மன்னியும், நீரே என் இரட்சகர் என்று உண்மையாய்ச் சொல்லும் போது, அவர் தன் உயிரையே விலைக்கிரயமாய் செலுத்தினதால் இப்பொழுது நீங்கள் விடுதலையாக்கப்படுகிறீர்கள். பாவமோ, சாத்தானோ உங்கள் மேல் ஆதிக்கம் செலுத்த முடியாது. இயேசு என் பாவத்தை மன்னித்து விட்டார் என்ற நம்பிக்கையும், சமாதானமும் உங்கள் உள்ளத்திலே வரும். இதற்குப் பெயர் தான் இரட்சிப்பு. இனி நீங்கள் பாவி அல்ல பரிசுத்தமாகிவிட்டீர்கள்

**எந்தப்பாவமும், சாத்தானும் உங்களை மேற்கொள்ளவே முடியாது. எல்லா நேரத்திலும், எந்த இடத்திலும் உங்களை வெற்றி சிறக்கப் பண்ணவே, இயேசு வெற்றி சிறந்து விட்டார்.**

## இயேசு வெற்றி சிறந்ததால், நீ வெற்றியாய் வாழ முடியும்

நமக்கு எதிரிடையாகவும், கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும், இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து சிலுவையின்மேல் ஆணியடித்து, துரைத்தனங்களையும், அதிகாரங்களையும் உரிந்து கொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார். கொலோ 2:14,15 இயேசு என் பாவத்தை மன்னித்து விட்டார். ஆனால் நான் விழுந்து, விழுந்து எழுகிறேனே, இன்னும் **Steady** ஆகலயே?. நான் பாவம் செய்யக் கூடாது என நினைக்கிறேன், ஆண்டவருக்குப் பிரியமா நடக்கனும் என்று விரும்புகிறேன் ஆனால்..... என்கிறீர்களா? இயேசுகிறிஸ்துவின் இரத்தம் உங்களையும், என்னையும் பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும், சாத்தானிடமிருந்தும் காப்பாற்றி, விடுதலை பண்ணினது மட்டுமல்ல ஆதாம், ஏவாளிடமிருந்து சாத்தான் பறித்துக் கொண்ட ஆளுகை, அதிகாரம், தேவமகிமை எல்லாவற்றையும் அவனிடமிருந்து மீட்டு, அவனைத் தோற்கடித்து சிலுவையிலே வெற்றி சிறந்து விட்டார். சாத்தான் நினைத்தான், இயேசுவை சிலுவையிலே அறைஞ்சிட்டா அதோடு அவர் கதை முடிஞ்சிருச்சு, எந்த மனிதனையும் அவர் காப்பாற்றவே முடியாது, அவரே என் காலடியில் தான் என்று மமதையாக நினைத்துக் கொண்டிருக்கும் போதே ஸ்திரியின் வித்தாக கன்னியின் வயிற்றில் பிறந்த, என் குதிங்காலைத் தான் நீ நசுக்க முடியும், சிலுவை மரணத்தைத்தான் ஏற்படுத்த முடியும், ஆனால் நானோ உன் தலையை நசுக்கி, நீ திரும்ப எழுந்திருக்க முடியாதபடி, ஜெயிக்க முடியாதபடி உன்னை தோற்கடிப்பேன் என்று இயேசு அவன் மேல் வெற்றி பெற்று விட்டார். (வெளி 1.18) இதை நீ விசுவாசித்து, பாவ எண்ணங்களோ, பாவச்செயல்கள் செய்ய சந்தர்ப்பமோ (சாத்தான், மனிதர்கள் மூலமாக) வரும்போது, நான் இயேசுவின் பிள்ளை, நான் அவருடையவன் (ள்) சாத்தானே, நீ என்னைத்தொட முடியாது அப்பாலே போ, சாத்தானே என்று அவனைத் துரத்துங்கள். அடுத்து அவருடைய வார்த்தையை தினமும் வாசித்து, தினமும் ஜெப நேரத்தில் அவரை சந்தித்துப் பேசி இயேசுவே பாவம் செய்யாதபடி எனக்கு உதவி செய்யும், காத்துக் கொள்ளும் என்று கேளுங்கள். எனக்காக உயிரையே விலைக்கிரமாய் கொடுத்து, எனனை அவருக்கென்று வாங்கியிருக்கிறார். அவருக்காக நான் நன்றியோடு வாழ வேண்டும் என்று உறுதியான தீர்மானத்தோடு இருங்கள். பரிசுத்தாவியானவரைப் பெற்றுக் கொள்ளுங்கள். எந்தப்பாவமும், சாத்தானும் உங்களை மேற்கொள்ளவே முடியாது. எல்லா நேரத்திலும், எந்த இடத்திலும் உங்களை வெற்றி சிறக்கப் பண்ணவே, இயேசு வெற்றி சிறந்து விட்டார். சுதந்திரதினம், குடியரசு தினம், போன்று வருடா வருடம் மட்டுமல்ல தினந்தோறும் நீங்கள் இயேசு பெற்ற வெற்றியினால் நீங்களும் வெற்றி பெறமுடியும். **Good Friday** என்பது விலைக்கிரையத்தையும், விடுதலையையும் உணர்த்துகிறது. ஈஸ்டர் இயேசு வெற்றி சிறந்ததையும், நாம் வெற்றியாய் வாழ வேண்டும், வாழமுடியும் என்பதையும் உணர்த்துகிறது. அர்த்தமுள்ள, வெற்றி அனுபவமுள்ள கொண்டாட்டங்களை கொண்டாடுங்கள் என்று வாழ்த்துகிறோம். ஜெபிக்கிறோம். எப்பொழுதும், எல்லா இடங்களிலும், உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் இயேசுவின் நாமத்தினல் வெற்றி சிறப்பீர்களா!.



jesuslives.in



மதுரை மாவட்ட அனைத்து திருச்சபைகள் மற்றும்
இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் இணைந்து நடத்தும்
மதுரையில் எழுப்புதல்
உபவாச
ஜெபம்
ஏப்ரல்
15
சனிக்கிழமை
9:30am to 2:00pm
இடம்
இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரம்,
பைபாஸ் ரோடு, பழங்காநத்தம்,
PRC Depot அருகில், மதுரை
Evg.L.Vincentraj
Evg.Kalavincentraj




சென்னையில்
14 வது ஆண்டு
ஸ்தோத்திர பெருவிழா
Evg.Kalavincentraj
Evg.L.Vincentraj
ஏப்ரல்
21,22,23
வெள்ளி சனி ஞாயிறு
மாலை 6.30 மணிக்கு
தொடர்புக்கு :
9884377527
இடம்: ஏலிம் மகிமையின் ஜெபவீடு
எண்: 1.பார்த்தசாரதி நகர் 11 - வது தெரு
ஆதம்பாக்கம் சென்னை - 88
jesuslives.in

# உன்னாலும் ஏதாவது செய்ய முடியும்

ஹலோ குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா!
ஹேப்பி ஈஸ்டர்



ரஷ்யா—உக்ரைன் போர்ன்னு நியூஸ் கேள்விப்பட்டீங்களா?, அங்கே கடவுளே இல்லைன்னு சொல்ற கம்யூனீஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஒரு அண்ணன் இருந்தாங்க. நம்ம கட்சி தானே ஆளும் கட்சின்னு துணிச்சலா போதைப் பொருட்களைக் கடத்தும் தொழிலைச் செய்து நிறைய சம்பாதிச்சாங்க. ஒருநாள் Police கையிலே நல்லா மாட்டீட்டாங்க. கம்யூனீஸ்ட் கட்சியிலே இருந்துட்டு இப்படி செஞ்சதாலே, மூன்று நாளும் ஒரு சாப்பாடும் கொடுக்காம, அடி அடின்னு அடிச்சு, சதையெல்லாம் பிஞ்சு தொங்குற மாதிரி அடிச்சு ஜெயில்ல போட்டுட்டாங்க. அவரை போட்ட அறையில்ல, ஒரு சின்னப் பையனும் இருந்தான். அவனைப் பார்த்தவுடனே தெரிஞ்சிருச்சு, அவனையும் நல்லா அடிச்சிருக்காங்க என்று. ஏன்னா அவன் உடம்பெல்லாம் நல்லா காயம். அவனைப் பார்த்து அவர் கேட்டார். நீ என்ன செஞ்ச என்று, அதற்கு அவன் ஒன்றுமே பதில் சொல்லலை. கொஞ்ச நேரம் சென்று ஒரு சின்ன பீஸ் ரொட்டித்துண்டை ஜெயில்ல இருக்கிறவங்களுக்கொல்லாம் கொடுத்தாங்க. அந்த சின்னப் பையன் தனக்கு கொடுத்த ரொட்டித்துண்டை அவன் சாப்பிடாம அதை கொண்டு போய் கொடுத்தான். அந்த அண்ணனும் 3 நாளா ஒன்னும் சாப்பிடாம இருந்ததால, தனக்குக் கொடுத்ததையும், அந்த சிறு பையனுக்குக் கொடுத்ததையும் வாங்கி உடனே சாப்பிட்டாங்க. மறுநாளும் ரொட்டித்துண்டை வாங்கினவுடன் அந்த அண்ணனிடம் கொடுத்துவிட்டு, அங்கிள் உங்களுக்கு கொடுக்க என்ட்ட வேற ஒன்றுமே இல்லை. ஏன்ட்ட இருக்கிறதை மட்டும் தான் நான் தர முடியும்,






jesuslives.in

உங்களைப் பார்த்தா பரிதாபமா இருக்குது. எங்க அம்மா நம்ம எச்சிலே நம்மை சுகமாக்கிவிடும்னு சொல்லியிருக்காங்க. நான் உங்க காயங்கள துடைச்சு விடுவான்னு சொன்னவுடனே, அதற்கு அந்த அண்ணன் சரின்னு சொல்லுமுன்னே வாயினாலே நக்கி நக்கி துடைத்து விட்டான்.அடுத்த நாளும் ரொட்டித்துண்டை நீங்க எடுத்துக்கோங்க, எனக்கு உள்ப்புண் அதிகமா இருக்கிற மாதிரி தெரியுது, நான் சீக்கிரம் இறந்திடுவேன்னு நினைக்கிறேன். எனவே நீங்க எடுத்துக்குங்க என்றான். உடனே அந்த அண்ணன் அவனைப் பார்த்து, நான் உன்னுடைய அப்பா கிடையாது. நான் உன்னை நேசிக்கவே இல்லையே. பின்ன ஏன்? எதுக்காக? என்னிடம் கொடுக்கிறாய்? என்றதும் அவன் சொன்னான். . **I Know My Jesus, இயேசுவை எனக்குத் தெரியும்**, நான் இயேசுவை அறிந்திருக்கிறேன். உங்களுக்குத் தெரியுமா?. இயேசு நம் பாவங்களுக்காக சிலுவையிலே மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார். இன்றைக்கும் உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார். இயேசுவுக்கு உங்களைக் கொடுப்பீங்களா? என்று இயேசுவைப் பற்றி அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே இரத்த வாந்தி எடுத்து, அந்த அண்ணனின் காலடியில் மரித்துப் போனான்.அந்த ஜெயில் அதிகாரிகள் அவன் காலில் கயிற்றைக் கட்டி தர தரவென்னு நாயை இழுத்துச் செல்வது போல் இழுத்துச் சென்றார்கள். அதைப் பார்த்தவுடன் அந்த அண்ணனின் உள்ளம் உடைந்ததுதான் அவரை இயேசுவை ஏற்றுக்கொள்ள வைத்தது. இன்றைக்கு ரஷ்யாவில் இயேசுவின் பிள்ளையாய் ஒரு சபையிலே, ஊழியங்களைத் தாங்கக்கூடிய, ஒரு தொழில் அதிபராய் சாட்சியாய் வாழ்ந்து வருகிறார். அந்த சிறுபையனைப் போல நீயும், இயேசுவை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துவாயா? கொடுப்பாயா?. அது தான் இயேசப்பாவின் ஆசை. அதுதான் அவருடைய தேவையும் கூட, நீ செய்ய வேண்டியதெல்லாம் இயேசுவை, நீ முதலாவது உன் இருதயத்தில் ஏற்றுக்கொள், அடுத்ததா உன் நண்பர்கள், பெரியவர்களிடம் **இயேசுவை எனக்குத் தெரியும், உங்களுக்குத் தெரியுமா?** என்று மட்டும் சொல், இயேசுவை சொல்லிவிடு. உன்னைக் கொண்டு அநேகர் இயேசுவின் பிள்ளையாக மாறுவார்கள்.

## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா நீங்க தான் என்னை பாவத்திலிருந்து காப்பாற்றும் இரட்சகர் என்பதை நம்புகிறேன். என் உள்ளத்திற்குள் வாங்க. இயேசப்பா உங்கள மற்றவர்களுக்குச் சொல்ல எனக்கு உதவி செய்யுங்க. ஆமென்.

## மனப்பாட வசனம்

வெள்ளியும், பொன்னும் என்னிடத்தில் இல்லை, என்னிடத்தில் உள்ளதை உனக்குத் தருகிறேன். அப்போஸ்தலர் 3:6





jesuslives.in

இயேசு வாழ்கிறார் மீடியா துறைக்கு

# வேலைக்கு ஆட்கள்

# தேவை

இடம்
மதுரை
சென்னை
திண்டுக்கல்

## Available Positions :

#On Site

**MANAGER - MEDIA OPERATIONS**

Should take care of the entire media operations with vast knowledge in media and digital media with latest technology implementation. Should be Expert in Team handling and the projects.

#Hybrid

**GRAPHIC DESIGNER**

Should have vast knowedgle in Corel Draw,Adobe in design and illustrator. Should have the idea of print media and good work skill on digital platform desgin work as per the platforms

#Hybrid

**CONTENT WRITER**

Should have a biblical knoweldge to write the content both in print media as well as in the Digital Platfoms. Excellent wrtining and communicating skill needed.

## Available Positions :

#On Site

**PROGRAM PRODUCER / DIRECTOR**

Planning and creating new program as per the Inputs and need to have a vast knowledge in creating content from production to broadcasting . Knoweldge in Target Audience is a must.

#Hybrid

**VIDEO EDITOR**

Should have vast knowedgle in Premire Pro, Davinci Resolve and FCP X. With creative Edit Skill using the lastest Desinging skill as per the broadcast Standard

#On Site

**SOUND ENGINEEER**

Should have a work experience in Live sound Reinforcment and should handle the Aduio Studio in addtion the Live Broadcasting in realtime.

## Available Positions :

#Hybrid

**MOTION GRAPHICS DESIGNER**

Should have vast knowedgle in After effects, Premiere pro and photoshop with good creative skill. Using the realtime graphics and virtual studio idea will be a plus.

#On Site

**CAMERAMAN**

Should Operate the camera with lighting and audio knowledge.Ready to learn and implement the latest technology

#On Site

**PHOTOGRAPHER**

Able to handle the DSLR and to work on the lightroom. Good Knowdelge with Creative Skill. Four Wheel Driving Experi-ence Needed.

Christian Candidates Having a Zeal to Work in a Christian Organisation can APPLY

**இப்பொழுது விண்ணப்பியுங்கள்**

https://jesuslives.in/careers/

OR

Email : connect@dprince.in

OR

Whatsapp : +91 7825 04 7825

OR

Whatsapp : +91 9498 00 0449

* Any UG/PG Candidates with respective Skill
* Bsc Visual Commuication or Any Media Studies or Experience in the respective Field.
* Experienced Staffs will be given Good Remuneration.
* Food And Accomodation will be provided.
* Male & Female can Apply.
* Fresher are welcomed whereas will undergo 3 months training without stipend.

jesuslives.in

# வாருங்கள் இணைந்து ஊழியம் செய்வோம்!

## உடன் ஊழியர்கள் தேவை!

காலி பணியிடங்கள்

| | |
|---|---|
| **ADMINISTRATIVE** OFFICER'S | 2 |
| **Manager** Ministry Operation's | 1 |
| **Office Assistant's** With Driving Skill | 2 |
| **Cook** To cook for 20 Members | 2 |
| **Volunteer** Prayer Warriors | 15 |

இப்பொதே! விண்ணப்பியுங்கள்

Whatsapp
+91 7825 04 7825
+91 9498 00 0449

jesuslives.in



# தேவனால் எல்லாம் கூடும்

**சகோதரர். பிரான்ங்லின் - சென்னை**

எனக்கு திருமணம் நடந்து 4 வருடங்களாகியும் குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்தது. பலரும் எங்களை பலவிதமாகப் பேசினார்கள். மனிதர்களின் நிந்தையாக பேச்சுகளால் மனம் உடைந்து போனோம். கடந்த ஆண்டு. இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு குழந்தை பாக்கியத்திற்காக ஜெபிக்க கேட்டுக் கொண்டேன். அந்த ஆண்டு வாக்குத்தத்தத்தின்படி இரட்டிப்பான நன்மையை தேவன் தருவார், நிந்தைகள் மாறும், தேவ நாமம் மகிமைப்படும் என்று சொல்லி ஜெபித்தார்கள். அதே போல் 2022-ஆம் ஆண்டிலேயே என் மனைவி கர்ப்பமாக தேவன் கிருபை செய்தார். இந்த ஆண்டு (2023) ஜனவரி மாதம் 18-ஆம் தேதி அழகான ஆண்குழந்தையை தேவன் எங்களுக்கு கொடுத்தார். எங்களுக்காக ஜெபித்த உங்களுக்கு நன்றி. எங்கள் நிந்தையை மாற்றி, எங்கள் தலையை நிமிரச் செய்து, மகிழச் செய்த தேவனுக்கு மகிமை உண்டாவதாக.

**சகோதரி. ஜெயசுதா - திருநெல்வேலி**

என் கர்ப்பபை அதன் நிலையை விட்டு கீழே இறங்கி விட்டதால் அதிகமான வலியும், வேதனையும் என் சரீரத்தில் இருந்தது. மருத்துவர்கள் ஆப்ரேஷன் செய்ய சொல்லி விடுவார்களோ என்று மிகவும் கலங்கினேன். ஆப்ரேஷன் செய்யும் அளவுக்கு எனக்குப் பொருளாதார வசதியும் இல்லை. மிகுந்த மனவேதனையில் நான் தங்களிடம் எனக்காக ஜெபிக்குமாறு கேட்டுக் கொண்டேன். நீங்களும் எனக்காக ஜெபித்தீர்கள். தேவன் ஜெபத்தைக் கேட்டு ஆப்ரேஷன் இல்லாமலே எனக்கு பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். இப்பொழுது எந்த வலியும் வேதனையும் இல்லாமல் நன்றாக இருக்கிறேன். என் பரிகாரியாகிய தேவனுக்கு மகிமை உண்டாவதாக.

**சகோதரி. கனிமொழி — மதுரை**

என் மகன் சென்னையில் ஐடி கம்பெனியில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். கம்பெனியில் ஆள் குறைப்பு செய்ததில் என் மகன் கடந்த பிப்ரவரி மாதத்தில் வேலையை இழந்தான். என்னிடம் தொலைபேசியில் தகவல் சொன்ன போது நான் இயேசுவை தினம் பார்க்கிறேன் பத்திரிக்கையை வாசித்துக் கொண்டிருந்தேன். அதில் இருந்த சாட்சி பகுதியை வாசித்த போது எனக்குள் விசுவாசம் வந்தது. தேவன் என்னையும் சாட்சி எழுத வைப்பார் என்று விசுவாசித்து, பொருத்தனை பண்ணி ஜெபித்தேன். தேவன் என் பொருத்தனையின் ஜெபத்தைக் கேட்டார். மார்ச் மாதம் இயேசுவை தினம் பார்க்கிறேன் பத்திரிக்கை எங்கள் வீட்டிற்கு வந்தது. அதை நான் வாசித்துக் கொண்டிருக்கும் போதே சென்னையிலிருந்து என் மகன் தொலைபேசி மூலம் என்னை தொடர்பு கொண்டு அம்மா எனக்கு வேற ஐடி கம்பெனியில் வேலை கிடைத்து விட்டது என்று தகவலை சொன்னான். எனக்கு மிகுந்த சந்தோஷம். பத்திரிக்கையில் சாட்சி எழுதுவேன் என்று பொருத்தனை பண்ணி ஜெபித்த என் ஜெபத்திற்கு தேவன் பதிலை தந்து அற்புதம் செய்தார். அவருக்கே மகிமை உண்டாவதாக.



jesuslives.in

# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார்.அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார்(1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | |
|---|---|
| A/C NAME | : JESUS LIVES TRUST |
| BRANCH | : KOCHADAI MADURAI |
| BANK NAME | : UNION BANK OF INDIA |
| A/C.NO | : 493902010001022 |
| IFSC CODE | : UBIN0549398 |

| | |
|---|---|
| A/C NAME | : L.VINCENT RAJ |
| BRANCH | : MADURAI |
| BANK NAME | : AXIS BANK |
| A/C.NO | : 109010100247030 |
| IFSC CODE | : UTIB0001765 |

**2) இணையதளம்(WEBSITE)**
WWW.JESUSLIVES.IN

ஸ்கேன் செய்யுங்கள்

**3) காசோலை(CHEQUE)**
JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

**4) GOOGLE PAY** : GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333 ,7598359316

**5) மணியார்டர்(E.M.O)** : இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர், ஏ - காலனி பரவை ,மதுரை - 625 402

भारतीय डाक
India Post

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

jesuslives.in

நடப்பு
★★★★★★
செய்திகள்

# கடலில் 171 ட்ரில்லியன் பிளாஸ்டிக் குப்பைகள்: உயிர்க் குலத்தை அச்சுறுத்தும் 'மிதக்கும் நோய்'

உலக பெருங்கடல்களில் மிதக்கும் பிளாஸ்டிக் குப்பைகளின் மொத்த எண்ணிக்கையை அறிவியல் பூர்வமாக மதிப்பிட்டிருக்கிறார்கள். கடலுக்கு ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு பெயர். ஆனால், இருப்பது ஒரே கடல்தான். இந்த எளிய உண்மை எல்லோருக்கும் தெரியும். இப்படி புவியின் பரப்பில் சுமார் மூன்றில் இரண்டு பகுதியில் பரவியிருக்கும் கடலில் மொத்தம் மனித குலம் சிந்தியிருக்கும் பிளாஸ்டிக் குப்பைகளின் எண்ணிக்கை, 171 ட்ரில்லியன் என்கிறார்கள் விஞ்ஞானிகள். 1 ட்ரில்லியன் என்பது லட்சம் கோடி. வேறொரு விதமாக சொன்னால், 1.71 கோடி-கோடி. கடல் எப்போதும் இப்படி குப்பையாக இருந்ததில்லை. 2005ம் ஆண்டு கடலில் மிதக்கும் பிளாஸ்டிக் குப்பைகளின் எண்ணிக்கை வெறும் 16 ட்ரில்லியனாக இருந்தது. 2019-இல், அதாவது 14 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை 171 ட்ரில்லியன் குப்பைகளாக அதிகரித்திருக்கிறது. அது மட்டுமல்ல. எந்த நடவடிக்கையும் எடுக்காவிட்டால், இந்த எண்ணிக்கை 2040-இல் மூன்று மடங்காக உயரும் என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கிறார்கள். பிளாஸ் ஒன் என்ற ஆய்விதழில் வெளியாகியுள்ள ஓர் ஆய்வு முடிவில் இந்த தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனால், சாமானியனுக்கு என்ன பிரச்சனை என்கிறீர்களா? இந்தப் பிளாஸ்டிக் குப்பைகள் மீன்களைக் கொல்கின்றன. மீன்களை மட்டுமல்லாமல் பிற கடல்வாழ் உயிரினங்களைக் கொல்கின்றன. கடலில் உள்ள இந்த உயிர்ச்சூழல், மனிதர்கள் வாழ்வதற்குத் தேவையான சுற்றுச்சூழலை தாங்கிப் பிடித்திருக்கின்றன. தவிர, மீன் வளம் குறைவது என்பது அவற்றை உணவுத் தேவைக்காக சார்ந்திருக்கும் மனித குலத்துக்கு மோசமான செய்திதானே. இந்த பிளாஸ்டிக் துணுக்குகள், மட்கி, ஆபத்தற்ற பொருளாக சிதைவதற்கு பல நூறு ஆண்டுகள் ஆகும். இப்போது வெளியாகியுள்ள, புதிய பிளாஸ்டிக் குப்பை மதிப்பீட்டை எட்டுவதற்கு 1979-ஆம் ஆண்டு முதல் திரட்டப்பட்ட தரவுகளை விஞ்ஞானிகள் பயன்படுத்தினர். பிறகு, சமீப காலத்தில் டிராலர்களையும், வலைகளையும் பயன்படுத்தி திரட்டப்பட்ட கடற்குப்பைகள் குறித்த தரவுகளையும் அத்துடன் இணைத்து முடிவுகளையும் உறுதிப்படுத்தினர். இந்த ஆய்வுப் பயணங்களின் போது வலையில் சிக்கும் பிளாஸ்டிக் எண்ணிக்கையைக் கொண்டு உலகம் முழுவதும் கடலில் குப்பைகளின் எண்ணிக்கையைக் கண்டறிவதற்காக ஒரு கணித மாதிரியை உருவாக்கினார்கள். இந்த முறையில், 171 ட்ரில்லியன் பிளாஸ்டிக் துணுக்குகள் கடலில் இருப்பதாக முடிவுக்கு வந்தார்கள். இதில், சமீப காலத்தில் கடலில் வீசப்பட்ட புதிய குப்பைகளும், கடந்த காலத்தில் வீசப்பட்டு சிதைந்து சிறு துகள்கள் ஆனவை எல்லாமும் அடக்கம் என பிபிசி-யிடம் தெரிவித்தார், பாட்டில்கள், பொட்டலப் பொருள்கள் (பேக்கேஜிங் மெட்டீரியல்), மீன்பிடிப் பொருள்கள் போன்ற ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருள்கள் காலப்போக்கில் சூரிய ஒளி காரணமாகவும், பொறியமைப்பு சிதைவு காரணமாகவும் சிறு சிறு துணுக்குகளாக நொறுங்கி விடுகின்றன. திமிங்கிலங்கள், கடற்பறவைகள், கடல் ஆமைகள், மீன்கள் போன்றவை இந்த பிளாஸ்டிக் குப்பையை தவறாக உணவு என்று நினைத்து விழுங்கி விடுகின்றன. காலப்போக்கில் இந்த பிளாஸ்டிக் பொருள்கள் வயிற்றில் அடைத்துக் கொள்ள, அவை பட்டினியால் இறக்க நேரிடுகிறது. இந்தக் குப்பைகள், மீன்கள், பறவைகள் உள்ளிட்டவற்றின் உடல் வாயிலாகப் பயணித்து நம் குடிநீரில் கலக்கின்றன.


jesuslives.in

LIVE

# நம்பிக்கையின் இரவு
# NIGHT OF HOPE



Evg.Kalavincentraj

Evg.L.Vincentraj

## புதிய மாத ஆசீர்வாத வாக்குத்தத்த ஜெபம்

**மார்ச் 31** இரவு 10.30 மணி முதல் 12.30 மணி வரை

ஒவ்வொரு மாதமும் கடைசி நாள் இரவு 10.30 மணி முதல்
மாதத்தின் முதல் நாள் 12.30 மணி வரை

நமது இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் YOUTUBE சேனலில் ஒளிபரப்பாகிறது

உங்கள் ஜெப விண்ணப்பங்களை அனுப்புங்கள்.
உங்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படும்

அனுப்ப வேண்டிய எண்
**944 28 00 449**

jesuslives.in